**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 342** **நாள்: 30.07.2026**

**அண்ணாநகர் மண்டலத்திற்குட்பட்ட வில்லிவாக்கம் இந்து மயானபூமியில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால், பொதுமக்கள் நியூ ஆவடி சாலையில் உள்ள வேலங்காடு மயானபூமி, ஜி.கே.எம். காலணி, ஜம்புலிங்கம் பிரதான சாலையில் உள்ள அரும்பாக்கம் மயானபூமி மற்றும் ஜி.கே.எம். மயானபூமியினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.**

பெருநகர சென்னை மாநகராட்சி, அண்ணாநகர் மண்டலம், வார்டு-94க்குட்பட்ட வில்லிவாக்கம் இந்து மயானபூமியில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள உள்ளதால், 30.07.2026 முதல் 28.08.2026 வரை 30 நாட்கள் மேற்கண்ட மயானபூமி இயங்காது.

எனவே, பராமரிப்புப் பணிகள் நடைபெறும் நாட்களில், பொதுமக்கள் அருகிலுள்ள அண்ணாநகர், நியூ ஆவடி சாலையில் உள்ள வேலங்காடு மயானபூமி, ஜி.கே.எம். காலணி, ஜம்புலிங்கம் பிரதான சாலையில் உள்ள அரும்பாக்கம் மயானபூமி மற்றும் ஜி.கே.எம். மயானபூமியினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**